(முற்பகல் 11-00).

## 2. தகவல் கோரல்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காலையில் நீங்கள் என்னுடைய அறைக்கு வந்திருந்தீர்கள். அப்போது, என்ன கேட்கப் போகிறீர்கள் என்பதை என்னிடம் சொல்லியிருக்கலாம் அல்லவா?

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாயிண்ட் ஆப் ஆர்டரிலோ, பாயின்ட் ஆப் இன்பர்மேஷனிலோ வராது. ஆகவே, இதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்திரவிடுகிறேன்.

## 3. கவன ஈர்ப்பு.

### (அ) விவசாயிகள் நில வள வங்கிக் கடன்களைத் திரும்பக் கட்ட இயலாத நிலை குறித்து.

திரு. க. சோலைராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கூட்டுறவு வங்கிகளில் கடன் பெற்றும் தக்காவிக் கடன் பெற்றும் வெட்டப்பட்ட கிணறுகளும், ஆழ்குழாய்க் கிணறுகளும் அறவே நீர் இன்றி பொய்த்துப் போன காரணத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் கடனைத் திரும்பக் கட்ட இயலாது திண்டாடும் நிலைமை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.